பார்த்திவ ஸூ
தை—மாசி மீ

ஸம்புடம் - 5
ஸஞ்சிகை - 2

1 FEB 1946
MADRAS

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

: ப்ரசுரிக்குமிடம் :
நெ. 5, ராமஸ்வாமி தெரு, த்யாகராயநகர்,
சென்னை.

3L
ஓ22 ணவா, N 4
N46.5.2
18948

February, 1946
Vol. 5, No. 2

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

		பக்கம்.
1,	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	26
2.	பகவதுபாஸநம்	30
3.	ஸம்ப்ரமோத நிவேதந பத்ரிகா	35
4.	ப்ரேமஸேவா	39
5.	செய்திகள்	41
6.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	42

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் 1946-ஜனவரி மீத்திய சந்தா வஸூல்

			ரூ.	அ.
5	ஸ்ரீ	V. R நாராயணன், பெங்களூர் ...	2	0
14	,,	N. S. சாரி ...	3	0
33	,,	M. R. ரங்கஸாமி ஐயங்கார், மன்னார்குடி ...	3	0
49	,,	K. S. கோபால், கல்கத்தா ...	3	0
50	,,	S. ராமஸ்வாமி, பம்பாய் ...	3	0
71	,,	S. ஸௌந்தர ராஜ ஐயங்கார், திருச்சி ...	2	0
73	,,	J. வரதராஜ ஐயங்கார், திருநெல்வேலி ...	3	0
75	,,	T. S. நரஸிம்ஹாசார்யர், மாயவரம் ...	3	0
88	,,	R. ராஜகோபாலையங்கார், பருத்திச்சேரி ...	3	0
103	,,	G. கோபால ஸ்ரீநிவாஸாசாரியர், காருகுரிச்சி ...	3	0
130	,,	ராவ் பஹதூர் சக்ரவர்த்தி வெங்கடாசார்யர்-விஜயராகவாசார்யர்	3	0
138	,,	R. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், ஸிகிந்திராபாத் ...	3	0
157	,,	N. நாராயண ஐயங்கார், கல்கத்தா ...	3	0
161	,,	S. திருவேங்கடாசாரியர், திருச்சி ...	3	0
164	,,	K. R. ஸ்ரீநிவாஸாசாரியர், திருச்சி ...	3	0
170	,,	T. தோதாத்ரி ஐயங்கார், திருச்சி ...	3	0
190	,,	R. ஸௌந்தரராஜ ஐயங்கார், மதுரை ...	2	0
197	,,	K. S. ஸ்ரீநிவாஸராகவாசாரியர், பம்பாய் ...	5	0
207	,,	C. R. ஸ்ரீநிவாஸையங்கார், காவேரிப்பாக்கம் ...	3	0
226	,,	A. R. நரஸிம்ஹையங்கார், கோயம்பத்தூர் ...	3	0
230	,,	K. பார்த்தஸாரதி, பம்பாய் ...	3	0
231	,,	P. S. வீரராகவாசாரியர், தேவனூர் விளாகம் ...	3	0
233	,,	M. ராஜகோபாலன், கல்கத்தா ...	4	0
241	,,	T. பார்த்தஸாரதி ஐயங்கார், மதராஸ் ...	2	0
289	,,	V. S. ரங்காசாரியர், கோயம்பத்தூர் ...	1	0



ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 5	பார்த்திவ ௵ தை—மாசி௴	ஸஞ்சிகை 2

“ஸுஹ்ருத்ஸர்வே ஶாஶ்வதைஶ்வர்யதாயே
ஸ்ருவாவஸாநஸ்தித தவாஹ்நியா நமு |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ||”

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

189218.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஶ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா |
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ||
ந்ருஸிம்ஹபக்தஸக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த “ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா” என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த “ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா” என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

—o—

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[5-ம் அங்கம்]

[ஸ்ரீ உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, அட்வோகேட், திருச்சி.]

[ஸம்புடம் 5, ஸஞ்சிகை - 1, பக்கம் - 5-ன் தொடர்ச்சி]

நம் எதிரிகள் போற்றும் சாந்தோக்யோபநிஷத்திலேயே ‘அஸுராணாம் ஹ்யேஷா உபநிஷத்’ [அஸுரர்களுக்குத்தான் இந்த உபநிஷத்து] என்று இருக்கிறது. இதில் தேஹமே ஆத்மா என்னும் என்னுடைய பக்ஷத்திற்கு ப்ரஜாபதியிடமிருந்தே உபதேசம் கேட்ட விரோசநனுடைய தீர்மாநத்தைப்பற்றிக் கூறியுள்ளது. நம்முடைய பலமான வாதத்திற்குப் பயந்து, எதிரிகளே தங்களுடைய உபநிஷத்திலேயே, ‘இந்த தேஹாத்ம வாதம் நம்முடைய உபநிஷத்’ என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்களே. எதிரி, தம் கையாலேயே இப்படி நம்முடைய பெருமையைப்பற்றி எழுதிக் கொடுத்திருக்கும்பொழுது நம்முடைய விஜயத்தில் என்ன ஸந்தேஹம் ?

[சாந்தோக்யோபநிஷத்தில் ப்ரஜாபதி வித்யையில், ப்ரஜாபதி ஆத்மாவின் பெருமையைப்பற்றிப் புகழ்ந்ததாகக் கேள்விப்பட்டு, ஸுரர்களின் தலைவனான இந்த்ரனும், அஸுரர்கள் தலைவனான விரோசநனும், அவர் புகழ்ந்த ஆத்மாவின் ஸ்வரூப ஸ்வபாவங்களைத் தெரிந்துகொள்வதற்கு, அவரிடம் சென்று முப்பத்திரண்டு வர்ஷம் குருகுல வாஸ ப்ரஹ்மசர்யம் செய்தார்கள். பிறகு அவர், ‘ஒரு மண் பாணயிலில் ஜலத்தை நிரப்பி, அதில் உங்களை (ஆத்மாவைப்) பார்த்துவிட்டு ஆத்மா விஷயத்தில் தோன்றும் ஸந்தேஹத்தைப்பற்றிக் கேட்கலாம்’ என்றார். இருவரும் அப்படியே ஜலத்தில் தம்மைப் பார்த்துவிட்டு, ‘ரோமம் நகம் முதல் முழுவதையும் ப்ரதிபிம்பமாகப் பார்க்கிறோம்’ என்றார்கள். ‘நீங்கள் க்ஷௌரம் முதலியன செய்துகொண்டு, நல்ல வஸ்த்ரங்களைத் தரித்து, நன்றாக உடம்பை ஆபரணங்களால் அலங்காரம் செய்துகொண்டு, பாணலி ஜலத்தில் உங்களைப் பார்த்துவிட்டு வாருங்கள்’ என்று மீண்டும் சொல்ல, அவர்களும் அப்படியே செய்தார்கள். ‘என்ன பார்க்கிறீர்கள்?’ என்று ப்ரஜாபதி கேட்க, அவர்கள், ‘எப்படி நாங்கள் நன்றாக அலங்காரம் செய்துகொண்டு நல்ல வஸ்த்ரம் தரித்து க்ஷௌரம் முதலியவற்றால் நன்கு பரிஷ்காரம் செய்துகொண் டிருக்கிறோமோ, அப்படியே நாங்கள் எங்களைப் பார்க்கிறோம்’ என்றார்கள். ‘அம்ருதமும் அபயமும் ப்ரஹ்மமுமான ஆத்மாவின் உபதேசம் இது’ என்றார் ப்ரஜாபதி. பிறகு இருவரும் மனஸ் சாந்தியுடன் சென்றார்கள். விரோசநன் தேஹத்தை இரண்டுதரம் பார்க்கச் சொன்னதில் ப்ரதிபிம்பத்தின் காட்சி ஏற்பட்டது. தேஹத்தைப்போலவே ப்ரதிபிம்பத்தின் உருவம். பரிஷ்காரங்களும் அலங்காரங்களும் செய்துகொண்டு மறுபடியும் பார்க்கச் சொன்னார். தேஹத்தைப்போல் ப்ரதிபிம்பம் இருப்பதைப் பார்க்கச்சொன்னதாலும், இது ஆத்மோபதேச மென்று சொல்லியதாகும். தேஹமே ஆத்மா

வென்பது குருவின் திருவுள்ளம். ஆத்மாவான இந்தத் தேஹத்தை அலங்காரம் முதலியன செய்துகொண்டு போற்றவேணுமென்பது அவர் திருவுள்ளம். இப்படி ஊஹித்துக்கொண்டு அஸுரர்களிடம் சென்று, தேஹமே ஆத்மா வென்றும், தேஹத்தையே பரிஷ்காராதிகளால் மிக்க ஆதரவோடு வளர்த்துவரவேண்டு மென்றும் உபதேசித்தான். ஏற்கெனவே அவனுடைய ஆஸுர புத்தியால் அந்தக் கொள்கையிலேயே ருசி யிருந்ததைப்பற்றி அவன் அப்படித் தப்பாக க்ரஹித்துக் கொண்டான். இந்தக் கதையைச் சொல்லிவிட்டு, 'அஸுரர்களுக்கு இதுதான் உபநிஷத்து. ப்ராணன் போனபிறகும் சரீரத்தை இன்றும் அவர்கள் ஆபரணங் களைப் பிறனிடத்தில் இரவல் வாங்கியாவது அலங்காரம் செய்து, பிறகு ஆடம் பரங்களுடன் ஸம்ஸ்காரம் செய்கிறார்கள்' என்று உபநிஷத் சொல்லுகிறது. இதைத் தனக்குப் பெரிய ஆதார மென்றும், உபநிஷத்தே தங்களுடைய உபநிஷத் தென்று கொண்டாடுவதாயும் மஹாமோஹன் பிதற்றுகிறான்].

"வைமதவிவர்ஜிதமவைர் ந்ருபை: க்ரோசதி ஹ்ருதயே விதீயதே வைஷம்ய।
அமரகுருசிக்ஷிதாயை ஸ்வஹஸ்தாயை ததாதா ஹ்ருதயம்॥"

புறச் சமயிகள், தங்கள் மநஸ் ஒப்பாமல் அஸம்மதமாக இருந்து ஆக்ஷேபித்துக்கொண் டிருக்கையிலேயே, தங்கள் உள்ளம் ஒப்பாத தங்கள் தங்கள் மதக் கொள்கைகளை மேலுக்குப் பேசுகிறார்கள். தேவகுருவான ப்ருஹஸ்பதி நமக்கு உபதேசித்திருக்கும் கொள்கைகள் நம் இஷ்டத்திற்குப் பொருந்தி நம்முடைய தீர்க்க வாஸனைகளையும் ருசிகளையும் அநுஸரித்தே யிருப் பதால், நாம் அந்தக் கொள்கைகளை மனமார ஒப்பி, மநஸ் ஸமாதானத் துடன் ஸந்தோஷமாகப் பாராட்டுகிறோம்; அப்படியே அநுஷ்டிக்கிறோம். பிறர் மதங்களில் பேசுவதை அவர்கள் யாரேனும் அநுஷ்டிக்கிறார்களோ? இல்லவே யில்லை. நம் கொள்கைகளைத்தானே அவர்கள் ஸர்வ காலமும் அநுஷ்டிக் கிறார்கள். 'அமரகுருசிக்ஷித' - தேவர்கள் குருவல்லவோ இம்மதத்தைக் கற்பித்தவர். அஸுர ஸம்பத்தைத் தேவ குருவே உபதேசிக்கையில், அந்த ஸம்பத் திலும் தைவ ஸம்பத்து உயர்ந்ததாகுமோ? 'அமரகுரு' என்பதால், 'எங்கள் குரு வின் சிக்ஷை அமரமே; அழிவற்றதே; உலக முள்ளவரையில் எங்கள் கொள்கை கள் அழியா; அந்தக் குருவின் உபதேசமும் அழியாது. அவரைப் போலவே அந்த உபதேசமும் அமரம்' என்று ரஸம். 'யதா ஹ்ருதயம்' என்பதால், 'தம் ஹ்ருத யத்தி லுள்ள அநுபவத்தை யொத்தே அவர் செய்த உபதேசம்; மற்ற மத ப்ரவர்த்தகரைப்போல அஹ்ருதயமாய் மேலுக்குப் பேசினதல்ல' என்றபடி.

துர்மதி:—ப்ருஹஸ்பதி ஸித்தாந்தத்தில் ப்ரத்யக்ஷம் ஒரு ப்ரமாணம் தானே உள்ளது. பிறர், ப்ரத்யக்ஷம் அநுமாநம் உபமாநம் அர்த்தாபத்தி சப்தம் முதலிய பல ப்ரமாணங்களைக் கொண்டு பலம் கட்டுகிறார்களே. அவர்களை எப்படி நாம் வெல்வது?

மஹாமோஹர்:— சொல்லுகிறேன் கேள். வேதாந்திகள், வேதம் ஒன்றைத் தவிர மற்றொரு ப்ரமாணத்தாலும் அவர்கள் ப்ரஹ்மத்தை நிரூபிக்க முடியாதென்கிறார்கள். மற்ற ப்ரமாணங்களுக்குப் புலப்பட்டு அவற்றால் ஸாதிக்கக்கூடுமானால், அது தங்கள் வேதாந்த ப்ரமாண தாத்பர்யமான ப்ரஹ்மம் ஆகாது என்கிறார்கள். 'ஆகமைகயோநி' - அவர்கள் ப்ரஹ்மமென்று அவர்கள் உறுதி. அவர்களுடைய சாஸ்த்ரயோநித்வாதிகரணத்தைப் பார்த்தால் போதுமே. மற்ற ப்ரமாணங்களைக்கொண்டு அவர்கள் ப்ரஹ்மத்தை ஸாதிக்கவே முயல்வதில்லை. மற்ற ப்ரமாணங்களைக்கொண்டு அவர்கள் ஸாதிக்க வந்தாலல்லவோ, நாம் அவர்களுக்கு அநேக ப்ரமாணங்கள் இருப்பதைப்பற்றிக் கவலைப்படவேணும்? வேதம் ஒன்றையே கொண்டு தான் அவர்கள் ஸாதிப்பது. அவர்கள் வேதத்தை (ஆகமத்தை) நம்பவில்லையென்று நாம் சொல்லிவிட்டால், அவர்களுக்கு ஒரு ப்ரமாண பலமுமில்லையே. மேலும் பார். ஸூர்யனைப்போலும் பட்டப் பகலைப்போலும் ஜ்வலிக்கும் ப்ரத்யக்ஷ ப்ரமாணத்திற்கு எதிரில், புத்தியால் ஊஹம் செய்வது முதலிய போலி ப்ரமாணங்கள் எப்படிப் பயன்படும்? ஆயிரம் ஸூர்ய பட உருவங்கள் ஒரு ஸூர்யனை வெல்லுமா? ஆயிரம் ஸூர்ய ப்ரதிபிம்பங்கள் என்ன செய்யும்? அநுமாநம் முதலிய ப்ரமாணங்களுக்கு ப்ரத்யக்ஷம்தானே உபஜீவ்யம்? ஸூர்ய ப்ரதிபிம்பங்களுக்கு ஸூர்ய பிம்பம்போல், மற்ற ப்ரமாணங்களுக்கு ப்ரத்யக்ஷம்தானே மூலமான உபஜீவ்யம்? சப்தமென்னும் வேத ப்ரமாணத்திற்கும் ப்ரத்யக்ஷம் உபஜீவ்யமென்று அவர்களே ஒப்புக்கொள்கிறார்கள். 'சக்ஷுர்வை ஸத்யம்' என்று ப்ருஹதாரண்யக உபநிஷத்தே கண்காட்சி ப்ரமாண பலத்தைக் கோஷிக்கிறது.

துர்மதி:— ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தையே பின்பற்றும் ப்ருஹஸ்பதி மதம் மிக்க பலமுடையதுதான். ஒரு மதமென்றால், அதில் மோக்ஷம் போகம் என்னும் புருஷார்த்தங்கள் வேணும்; பூஜிக்கும் தேவதை வேணும். இந்த உயர்ந்த மதத்தில், மோக்ஷம் போகம் தேவதை இவற்றின் ஸ்வரூபமென்ன கூறவேணும்.

மஹாமோஹன்:— சொல்லுகிறேன்.

“ [illegible] ।
[illegible] ॥”

சரீரத்தின் ப்ரளயம் (முடிவு) தான் மோக்ஷம். ஸம்போக ரதிதான் உயர்ந்த போகம். அந்த ரதி ஸுகத்தைக் கொடுக்கும் தேவதைகள், யௌவநத்தால் அலங்கரிக்கப்பட்ட நம் பெண்மணிகளே. இன்னும் கேள்.

மோக்ஷம் என்பது 'சரீர மில்லாத தன்மை' என்பர் வேதாந்திகள். 'அஶரீரத்வம் மோக்ஷம்' என்பது ஸ்ரீ சங்கர பாஷ்யம். இந்த்ரனுக்கு இதைத் தான் ப்ரஜாபதி உபதேசித்த முடிவென்று அவர்களே சொல்லுகிறார்கள். சரீரத்தின் ஆத்யந்திகமான ப்ரளயம்தான் மோக்ஷமென்று, பராசரர் மைத்ரேயருக்கு

விஷ்ணு புராணத்தின் முடிவில் உபதேசித்ததாக அவர்கள் சொல்லுவது. ப்ரத்யக்ஷத்தால் ஸித்திக்கும் ஸ்தூல சரீர மொன்றைத்தான் நாம் சரீரமென்று ஒப்புகிறோம். கண்ணுக்குத் தெரியாத ஸூக்ஷ்ம சரீரத்தையும் நாம் ஒப்புவதில்லை. தேஹத்தைக் காட்டிலும் வேறான ஓர் ஆத்மா இருப்பதையும் நாம் ஒப்புவதில்லை. ஆகையால், ஸ்தூல தேஹத்தின் முடிவே புருஷனுடைய முடிவான முடிவு' அதுவே அவனுக்கு மோக்ஷம் என்கிறோம். தேஹம் முடிவதுதானே முக்தியின் லக்ஷணம். மறுபடியும் பிறவாமை முக்தி யென்கிறார்கள். நம் முக்தியில் மறுபிறப்பே யில்லை யென்றுதானே நாமும் சொல்லுகிறோம். முக்திக்கு நிர்வாணம் என்று பெயர். தீபத்தின் நிர்வாண மென்றால் தீபம் அணைவது என்று பொருள். ஜீவ னென்னும் தீப ஜ்வாலை தேஹம் பிரிகையில் அணைந்து விடுகிறது. அணைந்து போன ஜ்வாலை மறுபடியும் ஜ்வலிக்குமோ? ரதி ஆநந்த மென்பதை யார் மறுக்கக்கூடும்? ப்ரத்யக்ஷமாய் அநுபவிக்கும் ஸுகங்கள்தன்னிலும் பெரிய பேரின்பம் வேறுண்டோ? அநுபவம்தானே பலமான ப்ரமாணம். 'ஏரார் முயல்விட்டுக் காக்கைப் பின் போவதே!.' '[illegible]' உத்தம போகத்தைக் கொடுக்கும் யுவதிகளிலும் மிக்க தேவதைகள் உண்டோ? நம் தேவதைகள் ப்ரத்யக்ஷம். அவர்களுக்குத் தேவர்கள் அசரீரராம்; அத்ருச்யராம். நாம்தான் அப்ரத்யக்ஷத்தை ஒப்புவதே யில்லை. நம் தேவதைகள் ப்ரத்யக்ஷ ஸித்தம். நம் தேவதைக ளெல்லாம் பெண்மணிகள். அவர்கள் ஆண் தேவரையும் தேவதைகள் என்கிறார்கள். ஆண்பிள்ளைகளைப் பெண்ணென்று பேசுகிறார்கள். தேவதா சப்தத்தின் ஸ்திரீலிங்கம் அதை ஒப்புமோ? அவர்களுக்கு ரஸ மேது? ஔசித்ய மேது? ரஸம் ஔசித்யம் உபபத்தி ஆகிய இவையெல்லாம் நமக்குத்தானே உள்ளன. பெண்களுக்கு யௌவநமே உயர்ந்த பூஷணம். அவர்களுக்கு ஆபரணங்கள் வேண்டுவதே யில்லை. ஏழை யுவதிகளும் தேவதைகள்தான். யௌவநம் ஒன்றே அவர்களுக்குப் போதுமான பூஷணம். பூஜிக்கும் தேவதைகளை ஆபரணங்களால் அலங்காரம் செய்வார்கள். நம் யுவதி தேவதைகளுக்கு ஆபரணமே அவச்ய மில்லை; இவர்களுக்கு ஆபரணங்கள் யௌவநத்தின் அழகை மறைக்கும்.

[தொடரும்]

189218.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

பகவதுபாஸநம்

பகவானுடைய நிரஸ்த நிகில தோஷத்வம், கல்யாணகுணாகரத்வம், அநந்த விபூதிமத்வம், ஸர்வஸ்மாத் பரத்வம், மஹோதாரத்வம் முதலிய வைபவத்தைக் கேட்டு, அப்படிப்பட்ட பகவானை அடையவேண்டு மென்னும் இச்சையினால் அவனை உபாஸிப்பதில் ஆசையுள்ளவனாய், வேதாந்தங்களில் விஹிதங்களா யிருக்கும் ப்ரஹ்ம வித்யைகளுள் ஒன்றில் ப்ரவர்த்திக்கும் முமுக்ஷுவுக்கு அந்தப் பகவானை ப்ரீதியுடன் த்யாநம் செய்வது ப்ராப்தம். ஒரு வஸ்துவை த்யாநம் செய்யவேண்டு மானால், சிற்சில தர்மங்களுடன் கூடியே அதை த்யாநம் செய்யக்கூடுமே ஒழிய, அந்தத் தர்மங்க ளெல்லாவற்றையும் கழித்துவிட்டு அதன் ஸ்வரூபத்தை மாத்ரம் த்யாநம் செய்வதென்பது ஸாத்யமில்லை என்பது அநுபவ ஸித்தம். "அவற்றைக் கழித்துப் பார்த்தால் ஶஶவிஷாண துல்யமாம்" என்று ஸ்ரீ தேஶிகன் அநுக்ரஹித் திருக்கிறா ரன்றோ? ப்ரஹ்மமோ கணக்கற்ற குணங்களை யுடையது; அவை யெல்லாவற்றுடனும் அதை த்யாநம் செய்வ தென்பது ஶக்ய மன்றாகையால், அவைகளுள் சிலவற்றையே நாம் தேர்ந்தெடுத்து, அவைகளை முன்னிட்டே அதை அநுஸந்திக்க வேண்டும். எந்தக் குணங்கள் அப்படித் தேர்ந்தெடுக்கத் தகுந்தவை யென்றால், எவை ப்ரஹ்மத்திற்கு அஸாதாரண குணங்களோ [அதாவது:-எவை யிராவிட்டால் ப்ரஹ்மத்தினுடைய ஸ்வரூப ப்ரதிபத்தி உபபந்நமாக மாட்டாதோ] அவை தாம் என்று நிர்ணயிக்கப்பட் டிருக்கிறது. அவை, ஸத்யத்வம் ஜ்ஞாநத்வம் அநந்தத்வம் ஆநந்தத்வம் அமலத்வம் ஆகிற ஐந்து குணங்களே என்று ஶாஸ்த்ரஜ்ஞர்கள் நிர்ணயித்திருக்கிறார்கள். இந்த ஐந்து தர்மங்களுக்கு இம்மாதிரியான ஏற்றம் கொடுப்பதற்குக் காரணம், இவை ஐந்தும் ப்ரஹ்மத்தை மற்றை வஸ்துக்களைக் காட்டிலும் விஜாதீயமென்று எடுத்துக் காட்டுகின்றன என்பதுதான். ஒரு வஸ்துவை மற்றை வஸ்துக்களைக் காட்டிலும் விலக்ஷணமென்று எடுத்துக்காட்டும் தர்மமன்றோ ப்ரதாநமான தர்மமாகும்? இந்த ஐந்து குணங்களும் ப்ரஹ்மத்துக்குள்ள வைலக்ஷண்யத்தைக் காட்டுகிறபடியால், இவைகளுக்கு ப்ராதாந்ய முண்டென்று சொல்லவேண்டும்.

முதலில் 'ஸத்யத்வம்' என்பதற்கு, ஸ்வரூபத்திலும் ஸ்வபாவத்திலும் மாறுதலற்றிருக்கும் தன்மை என்பது பொருள். அசேதநங்களும் ஸம்ஸாரி சேதநர்களும் இதனால் வ்யாவர்த்திக்கப் படுகிறார்கள். அசேதநங்கள் எப்பொழுதும் ஸ்வரூபத்தில் மாறுதல் அடைந்துகொண்டிருக்கின்றன ; ஸம்ஸாரி சேதநர்கள் தமது தர்மமாகிற ஜ்ஞாநத்தில் ஸங்கோச விகாஸ ரூபமான மாறுதல்களை உடையவர்கள். இம்மாதிரியான விகாரங்கள் ப்ரஹ்மத்திற்கு இல்லையன்றோ?

ஜ்ஞாநத்வமாவது, எப்பொழுதும் அஸங்குசிதமாக இருக்கும் ஜ்ஞாநத்தை உடைத்தாயிருக்கும் தன்மை. இது முக்த சேதநர்களின் வ்யாவ்ருத்தி

11 FEB 1946

யைக் குறிக்கின்றது. முக்தர்கள், முக்தி யடைந்த பிறகு அவர்கள் குறைவற்ற ஜ்ஞானவான்களாக இருந்தாலும், ஸம்ஸாரிகளாக இருந்த காலத்தில் ஸங்குசிதமான ஜ்ஞானத்தை உடைத்தா யிருந்தபடியால், அவர்களுக்கு நித்யா ஸங்குசித ஜ்ஞான மில்லையன்றோ? கேவல ஜ்ஞான ஶப்தம் நித்யாஸங்குசித ஜ்ஞானத் தை எப்படிக் குறிக்கு மென்றால், கால விஶேஷம் விஷய விஶேஷம் ஒன்றையும் சொல்லாமல் ஜ்ஞானமென்று மாத்ரம் சொல்லப்பட் டிருக்கிற படியால் புஷ்கலமான ஜ்ஞானமே குறிக்கப் பட்டதாகும். ஒருபொழுதும் ஸங்கோசம் அடையாமல் இருப்பதே ஜ்ஞான பௌஷ்கல்யம்.

'அநந்தத்வம்' என்பது, தேஶத்தாலும் காலத்தாலும் வஸ்துவினாலும் ஏற்படும் அளவற்றிருக்கும் தன்மையைக் குறிக்கிறது. 'ஒரு காலத்தில் இருந்தது மற்றொரு காலத்தில் இல்லை' என்னும் புத்திக்கு விஷயமாகும் தன்மை கால பரிச்சேதம். 'ஓரிடத்தில் இருக்கின்றது மற்றோ ரிடத்தில் இல்லை' என்று புத்திக்கு விஷயமாவது தேஶ பரிச்சேதம். தன்னைக்காட்டிலும் வேறுபட்ட வஸ்துக்களைச் சொல்லும் பதங்களால் வ்யவஹரிக்கப்படக்கூடாமல் இருக்கும் தன்மை வஸ்து பரிச்சேத மென்று சொல்லப்படும். ப்ரஹ்மம் எப்பொழுதும் இருக்கிற வஸ்து; அவன் எவ்விடத்திலும் இருக்கிறவன்; எல்லா வஸ்துக்களுக்கும் உயிருக் குயிராய் [அந்தராத்மாவாக] இருந்துகொண்டு, 'ஸவ்ஷம் வஹிஷம் ஸுஹ' என்கிறபடி ஸகல ஶப்தங்களுக்கும் வாச்யனாக இருக்கிறவன். இந்த 'அநந்தத்வம்' என்னும் தர்மமானது, அநந்த கருட விஷ்வக்ஸேனர் முதலிய நித்யாத்மாக்களை வ்யாவர்த்திக்கின்றது. அவர்கள் அணுவாகையால் தேஶபரிச்சின்னர்கள்; அவர்கள் மற்றை வஸ்துக்களில் அந்தராத்மாவாக ப்ரவேஶித்திருக்கவில்லை யாதலால், ஸர்வ ஶப்த வாச்யத்வமும் அவர்களுக்கு ஸம்பவியாது.

'ஆநந்தத்வம்' என்பது, ஆநந்தத்தை ஸ்வரூபமாகவும் குணமாகவும் உடைத்தாயிருக்கும் தன்மையைக் குறிக்கின்றது. இந்த ஆநந்தமும் அளவற்றது. இதனால் கீழ்ச் சொல்லப்பட்ட தர்மங்களால் வ்யாவர்த்திக்கப்பட்ட அசேதந பதார்த்தங்கள், மூன்றுவித சேதநர்கள், இவர்களெல்லாரும் வ்யாவர்த்திக்கப்படுகிறார்கள். ப்ரஹ்மத்தைத் தவிர்த்த மற்றை ஒன்றுக்கும் இப்படிப்பட்ட ஆநந்தத்வ மில்லை யன்றோ?

'அமலத்வம்' என்பது, ஸ்தூலத்வம் முதலிய விகாரங்கள் இராமலிருக்கும் தன்மையைக் குறிக்கின்றது. இதனால் அப்படிப்பட்ட விகாரங்களுடன் கூடிய அசேதந பதார்த்தங்கள் வ்யாவர்த்திக்கப் படுகின்றன. இது 'ஸத்யத்வ' ஶரீரத்திலும் அந்தர்ப்பூத மாகையால், அவ்விடத்திலும் இந்த வ்யாவ்ருத்தி சொல்லப்பட்டிருக்கின்றதென்று அறியவேண்டும். ஆகையால் இந்த ஐந்து குணங்களும் ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தின் ப்ரதிபத்திக்கு அவசியம் வேண்டியவை.

ஆனால், "ஸத்யத்வம்போல் வேறு சில குணங்களும் ப்ரஹ்ம ஸ்வரூப ப்ரதிபத்திக்கு உபபங்கங்களாக இருக்கின்றனவே; அவைகளையும் என் ஸத்யத்வ

கோஷ்டியிற் சேர்க்கக்கூடாது?" என்று ஒரு ஶங்கை ஜநிக்கலாம். "தஸ்ய ப்ரியமேவ ஶிர:" [ப்ரிய மென்பது ப்ரஹ்மத்தின் ஶிரஸ்] இத்யாதியாக ப்ரஹ்மத்திற்கு அவயவ பேதங்கள் ஆநந்த வல்லியில் கூறப்பட்டிருக்கின்றன. இந்த ப்ரிய ஶிரஸ்த்வம் முதலியவைகளும் ப்ரஹ்ம குணங்கள் தாமே. 'மஹதோ மஹீயாந:' என்னும் ச்ருதி வாக்யங்கள் அவனுடைய மஹோதாரத்வம் முதலியவற்றைக் குறிக்கின்றன. இன்னும் ஜகத்காரணத்வம் அந்தர்யாமித்வம் முதலிய அநேக ப்ரஹ்ம குணங்கள் உண்டு. இவை எல்லாவற்றையும் விலக்குவது ஏன்?" என்று கேட்கலாம். இவைகளுள் முதலிற் சொல்லப்பட்டுள்ள ப்ரியஶிரஸ்த்வம், ப்ரஹ்மத்திற்கு அவயவ முண்டென்று சொல்லுகின்றது. இப்படி ப்ரிய ஶிரஸ்த்வத்தைப் போல ப்ரஹ்மத்திற்கு அவயவத்தைப் போதிப்பிக்கும் குணங்களெல்லாம் 'ப்ரஹ்மம் அஸ்தூலம் அநணு' என்னும் ச்ருதி வாக்யங்களுக்கு விரோதிக்கிறபடியால், அவை ப்ரஹ்ம ஸ்வரூபத்தின் ப்ரதிபத்திக்கு அபேக்ஷிதங்களாகமாட்டா என்பது வ்யக்தம். மஹோதாரத்வம் அந்தர்யாமித்வம் போன்ற மற்றைக் குணங்களைக் காட்டிலும், ஸத்யத்வம் முதலான குணங்களுக்கு இருக்கும் வைஜாத்யத்தை ஶாஸ்த்ரஜ்ஞர்கள் இரண்டு மூன்று ப்ரகாரமாக நிர்வஹித்திருக்கிறார்கள். அவையாவன:—

சிலர், ஸத்யத்வம் முதலியவை கேவலம் ப்ரஹ்ம ஸ்வரூப நிஷ்டங்கள் [அதாவது: விகார மற்றிருக்கும் ப்ரஹ்ம ஸ்வரூபத்தையே ஆச்ரயித்திருக்கின்றன]; ஆகையால் அவைகளும் நிர்விகாரங்கள் [எப்பொழுதும் ஒரே ரூபத்தை யுடையவை]; அந்தக் காரணத்தால் அவை,

"யத்து காலாந்தரேணாபி நாந்யஸம்ஜ்ஞாமுபைதி வை ।
பரிணாமாதிஸம்பூதாம் தத்வஸ்து ந்ருப தச்ச கிம் ॥
அநாஶீ பரமார்த்தஶ்ச ப்ராஜ்ஞைரப்யுபகம்யதே"

என்கிறபடி பரமார்த்தங்கள். ஜகத்காரணத்வம் ஸர்வஜ்ஞத்வம் முதலியவைகளோவென்றால், ப்ரக்ருதி காலம் முதலிய விஶேஷணங்களுடன்கூடிய ஸ்வரூப நிஷ்டங்கள்; [ஜகத் காரணம் என்னும் ஜ்ஞாநம் ப்ரக்ருதி முதலியவைகளின் ஜ்ஞாநத்துடன் கலந்தே தோன்றுகின்ற தன்றோ?] அந்த ப்ரக்ருதி முதலியவை பரிணமிக்கும் ஸ்வபாவமுள்ள வஸ்துக்களாகையால், அவைகளுடன் கலந்து நிற்கும் தர்மமும் அவைகள்போல் ஸவிகாரமாகும்; அந்தக் காரணத்தால் அவை பரமார்த்தங்களாகமாட்டா. இந்த வைஷம்யத்தால் இவைகளைக் கேவல ஸ்வரூபத்திற்கு நிரூபகங்களென்று சொல்வது ஸாத்யமில்லை. இதுதான் இவர்கள் சொல்லும் உபபத்தி.

வேறு சிலர் பின்வருமாறு உபபாதிக்கிறார்கள். ஸத்யத்வம் முதலிய தர்மங்கள் ப்ரஹ்ம ஸ்வரூபத்தின் ப்ரதீதியில் அந்தர்க்கதங்களாகையால், அவைகளை ஸ்வரூபாந்தர்க்கதங்களென்றே சொல்லலாம். அதாவது: அவை ஸ்வரூபாபிந்நங்களென்று ஸித்தித்தது. ஸர்வஜ்ஞத்வாதிகளோ வென்றால், தர்மபூத ஜ்ஞாநத்துடன் ஸம்பந்தம் பெற்றவை; ஆகையால் அவை தர்மி ஸ்வரூபத்தைக்காட்டிலும்

பிந்நங்கள்; அந்தக் காரணத்தால் இவைகளை ஸ்வரூப நிரூபக கோஷ்டியிற் சேர்க்க இடமில்லை. இது தான் வைஷம்ய மென்கிறார்கள்.

மற்றும் சிலர் சொல்வதாவது:- ச்ருதியில் சில வாக்யங்கள் ஸ்வரூபத்தை உபதேசிக்கின்றன; வேறு சில வாக்யங்கள் உபாஸநத்தை உபதேசிக்கின்றன. ஸ்வரூபத்தை உபதேசிக்கும் வாக்யங்களிற் சொல்லப்படும் தர்மங்கள்தாம் ஸ்வரூப நிரூபகங்களாக எடுத்துக்கொள்ளத் தகுந்தவை. ஸத்யத்வாதிகள் அம்மாதிரி ஸ்வரூபார்த்தங்களான வாக்யங்களில் காணப்படுகிறபடியால், அவைகளை ஸ்வரூப நிரூபகங்க ளென்று சொல்லலாம். ஸர்வஜ்ஞத்வாதிகளோ வென்றால் உபாஸநார்த்தோபதிஷ்டங்க ளாகையால், அவை ஸ்வரூப நிரூபகங்க ளாகமாட்டா. இதுதான் வைஷம்யத்திற்கு நிபந்தநமென்று இவர்கள் சொல்லுகிறார்கள்.

இவ்வாறு உபபத்திகள் பலவகைப்பட்டாலும், ஸித்தாந்தத்தில் பேதமில்லை. ஸத்யத்வம் முதலிய ஐந்து தர்மங்கள்தாம் ப்ரஹ்ம ஸ்வரூபத்தின் ப்ரதிபத்திக்கு அவச்யம் அபேக்ஷிதங்கள். மற்றைத் தர்மங்கள் அப்படி அபேக்ஷிதங்களல்ல. ஆகையால் ப்ரஹ்மோபாஸ்தி செய்கிறவன் இந்த ஐந்து குணங்களுடன் கூடியிருக்கும் ப்ரஹ்மத்தையே மநஸ்ஸில் வாங்கிக்கொண்டு, அந்தந்த வித்யையிற் சொல்லப்பட்டிருக்கும் குணங்களுடன் விஸிஷ்டமாக அதை த்யாநம் செய்ய வேண்டு மென்பது ஸித்தாந்தம்.

இது ஸம்பந்தமாக ஒரு ஸந்தேஹம் ஜநிக்கின்றது. இவ்விடத்தில் உபபாதிக்கப்பட்டிருக்கும் விஷயம் முழுவதும் ப்ரஹ்மத்தின் ஸ்வரூப உபாஸ்தியைப்பற்றியதே. இந்த ஸ்வரூப உபாஸ்தியைத் தவிர்த்து வேறு ப்ரகாரமாகவும் ப்ரஹ்மத்தை உபாஸிக்கலா மென்று,

"𑌜𑍀𑌵𑌮𑍁𑌖𑍍𑌯𑌪𑍍𑌰𑌾𑌣𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌨𑍍𑌨𑍇𑌤𑌿 𑌚𑍇𑌨𑍍𑌨; 𑌉𑌪𑌾𑌸𑌾𑌤𑍍𑌰𑍈𑌵𑌿𑌧𑍍𑌯𑌾𑌦𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌹 𑌤𑌦𑍍𑌯𑍋𑌗𑌾𑌤𑍍"

என்னும் ஸூத்ரத்தால் ஸித்திக்கின்றது. ஸ்ரீதேசிகனும்,

"𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑍍𑌰𑍇𑌧𑌾 𑌹𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑍍𑌯𑌂 [illegible]"

[ப்ரஹ்மத்தைச் சேதந ஸரீரகனாகவும் அசேதந ஸரீரகனாகவும் கேவலம் ஸ்வரூபத்தாலும் உபாஸிக்கலாம்] என்று அநுக்ரஹித்திருக்கிறார். இந்த மூன்று வித உபாஸ்திகளுள் ஒன்றான ஸ்வரூப உபாஸநத்திற்குக் கேவல ஸ்வரூபமே விஷயமாகையால், ஸத்யத்வம் முதலிய ஐந்து குணங்களே ஸ்வரூப நிரூபகங்க ளென்றும், அவைகளைக்கொண்டே அந்த ஸ்வரூபத்தின் ப்ரதிபத்தி உபபந்ந மாகவேண்டு மென்றும் சொல்வது யுக்தம். மற்றை இரண்டு வித விஸிஷ்டோபாஸநங்களில் விஸிஷ்ட ப்ரஹ்மமே விஷயமாகிறபடியால், அந்த விஸிஷ்ட ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தின் ப்ரதிபத்திக்கு அபேக்ஷிதங்களான தர்மங்கள்தாமே ஸ்வரூப நிரூபகங்களான தர்மங்க ளாகவேண்டும். அந்தத் தர்மங்களைக்கொண்டு தானே அந்த உபாஸ்ய வஸ்துவின் ஸ்வரூப ப்ரதிபத்தியைப் பெறலாம். அந்தத் தர்மங்கள் கேவல

2

ஸத்யத்வ வர்க்கமாகமாட்டா வன்றோ? இவ்வாறு ஒரு ஶங்கை ஜநிக்கின்றது. விஶேஷ்யமே விஶிஷ்டத்தின் ஸ்வரூபமாக இருக்கும் பக்ஷத்தில் இந்த ஶங்கை எழாது. அப்படி இல்லையே. கடத்திற்கு ம்ருத்தே [மண்ணே] ஸ்வரூபமென்று சொல்லக்கூடுமோ? கடத்வ விஶிஷ்டமன்றோ அதன் ஸ்வரூபம்? அந்தக் காரணத்தாலன்றோ,

“ 𑌤𑌦𑍍𑌯𑌥𑌾 𑌰𑌥𑌸𑍍𑌯𑌾𑌰𑍇𑌷𑍁 𑌨𑍇𑌮𑌿𑌰𑌰𑍍𑌪𑌿𑌤𑌾 𑌨𑌾𑌭𑌾𑌵𑌰𑌾 𑌅𑌰𑍍𑌪𑌿𑌤𑌾 𑌏𑌵𑌮𑍇𑌵𑍈𑌤𑌾
𑌭𑍂𑌤𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌸𑍍𑌵𑌰𑍍𑌪𑌿𑌤𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑍇 𑌅𑌰𑍍𑌪𑌿𑌤𑌾𑌃”

[ரத சக்ரத்தில் சுற்றியிருக்கும் வட்டைக்கு அரக்கால்கள் எப்படி ஆதாரமோ, அந்த அரக்கால்களுக்கு மத்யத்தில் இருக்கும் குடம் எப்படி ஆதாரமோ, அம்மாதிரியே இந்த்ரியங்கள் முதலிய அசேதந வர்க்கத்திற்குச் சேதநவர்க்கம் ஆதாரமாகவும் அந்தச் சேதந வர்க்கத்திற்கும் பரமாத்மா ஆதாரமாகவும் நிற்கின்றன] என்று அர நாபி த்ருஷ்டாந்தம் உபந்யஸிக்கப்பட்டிருக்கின்றது. இதில் நாபி மாத்ரம் ரதசக்ரமாக மாட்டுமோ? நாபி போல அரங்களும் நேமியும் சக்ரத்தின் ஸ்வரூபத்தில் அந்தர்க்கதங்களல்லவா? ஆகையால் விஶிஷ்டத்திற்கு விஶிஷ்டம் ஸ்வரூபமேயொழிய விஶேஷ்யம் மாத்ரம் ஸ்வரூப மாகமாட்டாது. ப்ரக்ருதத்தில் உபாஸிக்கப்பட வேண்டிய வஸ்துவாகிற சேதநாசேதந விஶிஷ்ட ப்ரஹ்மத்திற்கு அந்த விஶிஷ்ட ப்ரஹ்ம ஸ்வரூபத்தின் ப்ரதிபத்திக்கு அபேக்ஷிதங்களான ஜகத்காரணத்வம்போன்ற தர்மங்களே ஸ்வரூப நிரூபகங்க ளாகவேண்டு மன்றோ? அப்பொழுது பூர்வம் ப்ரஸக்தமான விகியாவஶ்யம் [அதாவது: விகரிப்பதால் ஜநிக்கும் அபாரமார்த்யம்] ப்ரஸங்கிக்குமே. இந்தத் தோஷம் பாதக மில்லையா? இத்யாதியான ஶங்கைகள் ஜநிக்கின்றன. இவைகளுக்குப் பரிஹாரம் சொல்லவேண்டும். ஶாஸ்த்ரஜ்ஞர்களிடமிருந்து இதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

'ஒரு ஜிஜ்ஞாஸு.'

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸபா.

தோழத்தூர் ஸன்னதி அக்ரஹாரத்திலுள்ள ஸ்ரீ அகோபில மடத்தில் மதுரை வித்வான் அட்வகேட் என். ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யங்காரால் “ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸபா” ஸ்தாபிதம் செய்யப்பட்டு 2 மாதகாலமாக நடைபெற்றுவருகிறது, தினசரி மாலையில் அக்ரஹாரத்திலுள்ள ஸ்ரீமான்கள் ஸஹஸ்ரநாம பாராயணம் செய்துவருகின்றனர். மேற்படி சபாவை ஒழுங்காக நிர்வஹிக்க ஸ்ரீமான்கள் எஸ். ஆமருவி அய்யங்கார் அக்ராசனராகவும், ஆர். நரசிம்மாசாரியாரை காரியதரிசியாகவும், கிராமத் தலைவர் என் கிருஷ்ணஸ்வாமி அய்யங்காரை பொக்கிஷதாரராகவும் தேர்ந்தெடுத்து வேலை நடத்திவருகின்றனர்.

ஆர். நரஸிம்மாசார்யர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

வித்யா ரத்நாகரம் குடவாசல் ஸ்ரீ. உப. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி மஹா மஹோபாத்யாய பிருதம் பெற்றதை முன்னிட்டு, மாஜி ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீ. உப. வி. வி. ஸ்ரீநிவாஸையங்கார் ஸ்வாமி தலைமையில் சென்னை த்யாகராயநகர் உயர்தரக் கலாசாலையில் நடந்த பரிஷத்தில்

சென்னை த்யாகராயநகர் ஸ்ரீராமக்ருஷ்ண கலாசாலை மானேஜரும், 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' ஸம்பாதகருமான ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்ய ஸ்வாமியால், மத்ர ராஜதாநி நிவாஸிகளான ஆஸ்திகர்களின் சார்பாக ஸமர்ப்பிக்கப்பட்ட ஸம்ப்ரமோத நிவேதந பத்ரிகா.

மதுரைத் தமிழ்ச் சங்கத்துக் கார்ய நிர்வாஹ ஸபையின் கார்யதர்சியும், மஹாவித்வானும், அட்வொகேட்டுமாகிய ஸ்ரீ. உப. N. R. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி B.A., B.L., அன்புடன் அளித்த மன்பெரு மகிழ்ச்சி தெரிக்கும் செந்தமிழ்ச் சித்திர பத்திரம். [வடமொழி வாக்யங்களின் மொழிபெயர்ப்பு]

ஸ்ரீமத்ஸு மஹாமஹோபாத்யாய வித்யாரத்நாகர குடவாஸஸூரி நரஸிம்ஹாசார்யேஷு: மத்ரராஜதாநீ நிவாஸிபி: ஆஸ்திகமஹாசயை: ஸாதரம் ஸமர்ப்பிதா ஸம்ப்ரமோத நிவேதந பத்ரிகா ॥ க.

திருமிகு சிறப்பிற் சென்னை மாநகர்
வாசிக ளாகிய மாண்புடை ராஸ்திகர்
மன்னு புகழ்மஹா மஹோபாத் யாய
வித்யரத் நாகர வியன்குட வாயில்
நரசிம் மாரிய நான்மறைக் குரிசிற்
கன்புட னளித்த மன்பெரு மகிழ்ச்சி
தெரிக்கும் செந்தமிழ்ச் சித்திர பத்திரம். (1)

ஆர்யா மஹாசயா: ! ஸ்ரீமதா மஹாராஜராஜேந ஸம்ஸ்தாநதந்த்ர பதிநா மஹாமஹோபாத்யாய பிருதஸம்வர்த்தநேந தத்ரபவந்த: ஸபாஜிதா இதி ப்ரஸ்தாவேந தத்ரத்ய நிவாஸிந: ஸர்வேऽபி ஆஸ்திகா: ப்ரமோதஸ்ய பராம் காஷ்டாம் ஆபந்நா: ॥ உ.

விழுமிய கேள்வித் தொழுதகைப் பெரியோய்!
மன்னிய திருமிக வாய்ந்தபே ரரசர்க்
கரசரா யிலகி யுரைமிகு பாரத
நாட்டினை நாளும் நலமிகக் காக்கும்
சக்கர வர்த்தியார் சான்றோய்! நினக்கு
மஹாமஹோ பாத்தி யாயரென் வான்பெயர்
சூட்டிப் போற்றிய தூய செய்தி
கேட்ட விங்கக ராஸ்திகர் யாவரும்
களிப்பெனும் பெருங்கடற் கரையடைந் தனரே. (2)

அயி போ வித்யாரத்நாகரா: ! வேத வேதாங்காதிஷு ஸர்வேஷ்வபி வித்யாஸ்தாநேஷு நிரவத்ய ப்ராவீண்ய

நிலவிய கீர்த்திப் பலகலைக் கடலே!
மேதகு வேதவே தாங்கம் முதலிய
கலைத்துறை தோறும் மலைத்திட லின்றி

ஹவதீயவாணிதய்ஸ்ய ஸவடயா ஸ-
உ-த்விதயம் ஸஹாஜநாஜதி ஸுஷ்டூ
ரதஅக்ரவதிஃநஃ ஸஉ-த்விதகாரி
க்ஷம் ஸமீக்ஷ்யகாரிக்ஷம் ஞ் ஸுஷ்டாஹிஃ
ஸத்யஞ்சம் ஸுஹிநத்யதே ॥ ௩.

நிகழும் நினது நிறையறி வாற்றற்
கேய்ந்த சிறப்பினை யாய்ந்து புரிந்தருள்
செங்கோல் வேந்தர்பாற் செவ்விதி னமைந்த
தெரிந்துசெய் திறனொடு சேர்ந்து திகழும்
தக்கது புரியும் தன்மையும் சாலப்
புகழ்ந்தெம் மனோரால் போற்றப் பெறுமே. (3)

ஹே உஹாஉஹோவாயத்யாயா: !
ஸாஜ்வ்ய ஸௌகதாஹாஃதஅாவஃகா
திஷு பாஹெய்ஷு, ஸுஜெஷதா
திஷு குஹ்யஞ்ஜஷு அ்வி:ஸா
ஞெஷு பஹோ: காஞாதார்ஹ்ய
க்ஷதவரிஹுஉாணாம், குஷாதித
ஹஸாநாம், தஹெதாவிநாயயாஉ-ந
ராஉநஜ வ்ஹ்ரதிவரிஹ்ரஹீதெ
ஸுதிவவிதெ்ர ஸ்ரீவிபிஷாஜெஷத
வி:ஸாஞஹாகீபஸீதீயெஃ க்ஷதாவ
ஹாஹாநாம் ஹவதாம் தத்ர தத்ர
ஸஹாஸ ஔவமிஷஉ உ-ர-ஹ
வ்க்ரியா வ்திவாஉநநைநவணீ
உந-ஹய ஸவெஃ ஸஹ்ரஉயா:
ஸபிர:க்ஷம்வம் ஸ்ராவஉாநா: உஸீ
உரய்ஹ்ஞெ ॥ ௪.

மஹாமஹோ பாத்தி யாயவண் குரிசில்!
சாங்கியம் பௌத்தம் சார்வாக மாருகதம்
முதலிய சமய முதுநூல் களிலும்
அத்துவி தமுத லானவுட் சமய
நெறிநூல் களிலும் நெடுநாள் முயன்று
சாரம் குனித்துணர் தன்மையின் மேலும்
நாத முனிவரர் நயத்தகும் ஆள
வந்தா ருடையவ ராகிய மறைதேர்
வள்ளியோ ராற்கைக் கொள்ளப் பெற்று
விள்ளரும் புனிதம் மேவி விளங்கும்
விசிட்டாத் வைதசித் தாந்தமாம் விழைதகு
கங்கையிற் றிளைத்த கலைவல! வொருநீ
மிக்கார் வேத விமலர் குழுவிடை
உபநிட தர்த்த முணர்த்துந் திறனை
அறிந்து நாடொறு மான்றோ ரெல்லாம்
சிரந்து ளக்கிநின் சீர்செப் பினரே. (4)

ஹே விஞஞரெணத்யா: நரஸிஹா
ஹாயஃா:! ஸ்ரீ திர-உமெ திர-
வதி தெவஸ்தாநாஸ்தாநவிஞதஉம்
ஸுயம்க-வஃாணெ: ஹவதீ: ஹஹவ
ஞம் ஸ்ரீநிவாஸெவ யக்ஷீய்க்ஷதத்
ஸகலொவநிஷஉயெஅவஸம்ஹா
ராய வ்வ்ரதெ்தஷு ஸ்ரீஹாஷ்யாதி
ஹ்ரம்யெஷு உ-ரவபொயாநவி
ஸ-க்ஷாநம்ஹாநுஸுயிக்ஷத்யவணீத
வ்ாக்ஷத யௌகிக வெஜிகஸாயா
ரணெ்யந ஸஉ-ஹாவிதஸகய ஜந
தாஹ்ரஉயயாஸரயஸரயா வஅந
ஸரணத்யா வ்வதிஃதாம் உவநத்யாவ
ஹெஹம் ஸுந-ஸ்ரத்ய மிதராம்

வரமலி புலமை நரசிம் மாரிய!
திருமலை திருப்பதி தேவஸ் தானக்
கலைக்கழ கத்துக் கற்றோர் புகல
விளங்கும் ஒருநீ வேங்கடே சனையே
இலக்கிய மாக்கி யெல்லா வுபநிட
தர்த்தங் களையும் ஆய்ந்து வரன்முறை
தொகுத்து முடித்த சொலற்கரும் பெருமைச்
சீபா டியமுதற் செவ்விய கலைகளில்
அறிதற் கரிய ஆழ்பொரு ளெல்லாம்
பேதையர் பெண்டிர் பெருங்கலை வாணர்
வைதிகர் லௌகிகர் மற்றை யோருடன்
மகிழ இனிய வசன நடையிற்

ஷித்ரீயஉாணஞெ்தவொ வயம் வதூா
உஹெ ॥ ௫.

ஹெ ஸஹ்ருஉயய-ஙமீணா:! ஸ்ரீஉ
உவயஹாவ்தா௨ரு தஉிவ்யக்ஷேத்ரு ஶாஙா
ஶ்ர ஹாஙநாஉா, விஞஉஙிஷெஸஹ்ய:
ஸஞெ வஙிஶ்ரஹீத தஙீயாஶ்ரவெ-
ஸஹ்ய: ஜந-ஷாஅ ஷ்ருவஷ்யாகாநாம்
தத்ருஸவதாம் உ-வாஙவிஷாக,பஷ்ஹீ
ஷ- ஸஹாஸ- ஸம்ஸ்க்ருதஉ்ராகிய
ஙஒவ வெஉாஞ ய-ஶஜ ஷ்ருயாந
ஷ்ருதிதம்த்ரு ஷ்ருக்ரியாஷ்ருதிவாஉந
க்ஷணெஷ-ஙிங ஶஹஉஙிஶஹஙிதாஙி
ஸஙஸாஙி ஊஉ-தஙாணி உய-ஙா
ணிஅ ஸாஷிதஙதாஙி ஜஉாநீஉவஷ்
ஷாகூம் ஶ்ரவணவ-டியொ: ஸந-ஙா
ணஞீவ ॥ ௬.

ஹெ விபஶ்சிஉவபஶ்சிஉா:! பாய்ஷ்ா
உாஙஸஷ் தத்ரு தத்ரு உஹாந-ஹா
வெஸஹ்ய:க-ங-ஶ்ஙிஸ தககூவாஅஸதி
ஸ்ரீஙம் ஶாஅாயஹஸாஉிஷ்ருஸ்ருதிஸஹ்ய:
வஞ்தஷ்ருகாணெஸஹ்ய: தத்ரு
ஸவதீ: ஸஉயிஶதா: ஸவஹா விஉாஷ்ய:
நெஸஶ்ரிஹகெண விநயெந, ஷிதா
வ-ஒவெஹண, ஷியஉய-ஙஸாஷி
க்ஷெந, விஶிஷெந ஐம்ஹாஸ-ஒயா
விஉ-ஒஙக்ஷெந, ஸவஹஸஉக்ஷெந,
ஸஹாயஹவஙக்ஷெந, ஸநாஷெநூ
ஶ்ர ஶ-ணஶணெ: ஸளஙஹெநவ
ஸளவணஹஸ்ய ஸ-உநஸ:, ஸ-த
ஙாம் ஶ்ரூஉொஉவத்ய: விஙாஜஞெ ॥ ௭.

ஹெ ஶ்ரூஅாயஹவயஉா:! ஸாயஞந

செயுமுபன் யாஸச் சிறப்பினை நினைந்து
நினைந்து வியக்குமென் நெஞ்சகம் மாதோ.(5)

ஆன்றமைந் தடங்கிய அறிவுடை யண்ணல்!
இல்லற மாகிய நல்லற முடித்துத்
துறவுமேற் கொண்ட நிறைபே ரறிஞரில்
தோன்றி யாரா வமுதன் துயர்கெட
இடங்கொண் டுறையும் குடந்தைக் கெழின்
மாகிய குடவா யிற்பதிப் பெயரோ [முக
டியைத்துல குரைக்கும் ப்ரசித்தி வாய்ந்தநின்
முககம லத்து முதிர்சுவைத் தென்மொழி
வடமொழி வடிவின் வயங்குவே தாந்த
விசேடார்த் தங்களின் விளக்க மாகப்
பொற்பொடு மிளிரும் பற்பல சபையினும்
தடைசிறி தின்றி யடைவுடன் வெளிவரும்
இனிமையும் சுவையும் மென்மையும் ஏய்ந்த
மணிவா சகங்கள் வனப்புட னின்றுமெம்
செவிப்புலத்தொலித்துத் திகழ்கின்றனவே.(6)

முதன்மை சான்ற மூதறி வுடையோய்!
இளமை தொடங்கி ஆங்காங் கிலகிய
அறிஞ ருள்ளே அணிதிகழ் குறிச்சித்
தர்க்க வாசஸ் பதியெனத் தரைபுகழ்
சீரங் காரிய தேசிகன் முதலிய
நல்லோ ரிடத்து நயந்துநீ பெற்ற
கல்விக ளெல்லாம் கவினுற நின்பால்
இயல்பா யமைந்த நயமிகு வணக்கமும்
புன்முறு வலின்பின் புரையறத் தோன்றும்
நன்மையு மினிமையும் நண்ணிய பேச்சுமென்
றித்திறத் தாலு மியலா டம்பரம்
அழுக்கா றென்றிவை யகன்றுசேய் மைக்கண்
நீங்கிட நிலவு நிறைகுணத் தாலும்
யாவரும் விரும்பும் இயல்பி னாலும்
தன்னலம் கருதாத் தகவி னாலும்
மற்றும் பலபல மாண்குணத் தாலும்
பொன்மலர் நன்மணத் தொடுபொலிந் தென்ன
மிகமணம் பெற்று விளங்கு மாலோ. (7)

ஓங்கிய கதிரென ஒளிரும் ஆரிய!

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
அ.

மாலைப் பொழுதின் மலர்ந்த மல்லிகைப்
போதில் நறுமணம் போலெத் திசையினும்
இடைவெளி யின்றி யியலும் தன்மை
வாய்ந்தபல் குணத்தால் மகிழ்ச்சி விளைக்கும்
நின்பாற் புலமையி னிறைவா யமைந்த
நன்சொல் லொழுக்கால் நயந்து நாளுநீ
பணிந்திடு பகவன்பத் மாஸநி நாதன்
நினக்குலப் பில்லா நிறைவா ஞளும்
அரோக திடகாத் திரமு மனைத்துச்
செல்வமு நல்கிச் சிறப்புச் செய்கெனத்
தொழுதளித் திடுமிச் சொற்சித் திரத்தினை
விரும்பியேற் றருள்கென வேண்டுதும் யாமே.
(8)

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

பார்த்திவ ௵ மாசி ௴

1-உ	செவ்வாய்க்கிழமை	கும்ப ரவி 16-2' ஸர்வ ஏகாதஶீ. கும்பஶுக்ல த்வாதஶீ
3-உ	புதன்	த்ரயோதஶி திதி
5-உ	சனி	மாசி மகம்
9-உ	புதன்	பஞ்சமி திதி
10-உ	வியாழன்	அதிதி
11-உ	வெள்ளி	ஷஷ்டி திதி
13-உ	ஞாயிறு	அஷ்டகா
14-உ	திங்கள்	அந்வஷ்டகா
20-உ	ஞாயிறு	அமாவாஸ்யை
24-உ	வியாழன்	சதுர்த்தஶீ திதி
25-உ	வெள்ளி	பஞ்சமீ ஷஷ்டீ திதித்வயம்
30-உ	புதன்	கும்ப ஶுக்ல ஏகாதஶீ திதி, ஸர்வ ஏகாதஶீ.

ப்ரேமஸேவா

[ஸ்ரீ. உ.ப. S. T. ஸ்ரீநிவாஸாசாரியர் வித்வான், M. A., L. T., திருவையாறு.]

இந்துலேகா எம். ஏ. என்றால் ஆங்கிலக் கல்வி பெற்ற மாதர்கள் வர்க்கத்தில் அறியாதவர் இல்லை. இவள் இங்கிலீஷ்ப் பாஷையைச் செவ்வனே கற்று, அதில் எம். ஏ. விருதும் பெற்று, ப்ரெஞ்சு ஜெர்மன் முதலிய மொழிகளைத் துணையாகப் பயின்று, நவீனமான ஆங்கில நாகரிகமே உருவெடுத்து வந்தவள்போல் விளங்குகிறாள். ஸெயின்ட் ஆன்ஸ் (St. Anne's) கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராய் விளங்கினாள். உயர்ந்த கம்பீரமான தோற்றம். சிறந்த வடிவழகு. கறுத்து நீண்ட கண்கள். எடுப்பான நாஸிகை. சிரிப்புற்ற சிறு வாய். சற்று மெலிந்த ஆக்ருதி. ஆழ்ந்த யோசனை யுற்ற முகத் தோற்றம். உலக மாதர் சங்கத்தின் இந்திய கார்யதர்சிகளில் ஒருத்தி. விவாக மென்பது, 'பெண் அடிமை, ஆண் எஜமானன்' என்ற குருட்டு நம்பிக்கையைக் காட்டும் ஓர் பந்த விசேஷம் என்று நம்பி, இருபத்தாறு பிராயங்கள் ஆனபோதிலும் மண மாகாதவள். சிறிதளவு த்யாகத்தின் மூலமாகவாவது ஒரு கருத்தை நிலைநிறுத்தி, அதைப் பரப்புவதிற் பிடிவாத முள்ளவள்.

ஒரு ஸமயம் இவள், ராஜப்பாளைய மென்ற பாண்டிய நாட்டுப் பட்டணத்தில் மாதர் சங்கத்தின் வருட விழாவிற்குத் தலைவியாக வரவழைக்கப்பட்டிருந்தாள். அதற்காகச் சென்னையிலிருந்து ராஜப்பாளையம் வந்துசேர்ந்தாள். இவள் தலைமையில் வருட விழாக் கொண்டாட்டங்கள் செவ்வனே நடைபெற்றன. திரும்புகாலில் ஸ்ரீவில்லிபுத்தூர் சங்கத்தில் ஒரு சொற்பொழிவு நடத்த வேண்டு மென்று வேண்டப்பெற்று, இவள் ஸ்ரீ வில்லிபுத்தூரில் மிஷனரிப் பள்ளி ஹால் ஒன்றில் வந்து தங்கினாள்.

சொற்பொழிவு நடத்தவேண்டிய நாளின் முதனாள் இரவு, இந்துலேகா நித்திரை வராமல், தான் தங்கியிருந்த ஹாலை விட்டு வெளியே வந்தாள். சற்றுத் தூரத்தில் பரந்த மலைகளும், பளிங்குபோல் தெளிந்த திருமுக்குளமும், நீலமான வானும், அதில் மேற்றிசைப் புறம் திகழ்ந்த பிறைமதியும், தண்ணென்ற காற்றும் அவள் மனத்தைக் கவர்ந்தன. கொஞ்ச தூரத்தில், ஒரே தேஜோராசியும் எல்லையற்ற ஜனத்திரளும் தென்பட்டன. இந்துலேகா, தன் உதவிக்காகப் பக்கத்திலிருந்த கிறிஸ்தவப் பெண்ணினிடம், 'இது என்ன கூட்டம்?' என்று ஆங்கிலத்தில் கேட்டாள். அந்தப் பெண் வெள்ளைக்காரப் பெண்களிடத்தில் அதிகம் பழகியவ ளாகையால், ஆங்கிலத்தில், 'இப்பொழுது கோயிலில் பெரிய திருவிழா; இன்று ஆறுவது நாள்' என்றாள். இந்துலேகா 'எனக்குத் தூக்கம் வரவில்லை. சற்றுக் குளிர்ந்த காற்றில் கொஞ்ச தூரம் சென்று வருகிறேன். நீ ஹாலில் உட்கார்ந்திரு. வந்துவிட்டேன்' என்று சொல்லி நடந்தாள். திருமுக்குளக் கரையூடே நடந்து தெருவில் நுழையும்பொழுதே ஜனத்திரள் அதிகமாக இருந்தது. ஜனங்கள் இடைவிடாத வரிசைகளாக நகரத்தின் நாற்புற மிருந்தும் அந்தத் தெருவில் கூடினர். வயதான ஒரு பெண் பிள்ளையை

'அம்மா! இதென்ன திருவிழா?' என்று கேட்டாள். அந்த அம்மாள் இந்து லேகாவை உற்று நோக்கினள். சுருட்டை சுருட்டையாக நெற்றியில் ஊசலாடும் அளகக் கற்றைகளும், மை தீட்டப்பெற்ற இருண்ட கண்களும், வர்ணம் தீட்டப் பெற்று அதனல் அதிகமாய்ச் சிவந்து காணப்பெறும் உதடுகளும், அழகியதும் புலமையும் யோசனையும் போராடும் முகத்தோற்றமும், உயர்ந்த ஸலவைப் பட்டாடை அணிந்த மேனியும் கண்ட அந்த அம்மாள் ஆச்சர்யத்துடன், 'இப்பொழுது ஸ்ரீ ஆண்டாளுக்கு நீராட்ட மஹோத்ஸவ மென்று தெரியாதா?' என்ருள். ஆண்டாள் வைணவ ஆழ்வார்களில் ஒருவர் என்பது தான் இவள் அறிந்து கொண்டது. வைஷ்ணவ குலத்தில் பிறந்தும், மூன்று தலை முறையாய் ஆங்கில நாகரீகத்திலேயே ஊறி, மத ஸம்பந்தமான விஷயங்களில் அறியாமை மாத்ரமன்றி அவமதிப்பும் கொண்டவள். 'இந்த ஆண்டாளைக் கண்ணல் காண்பதற்கென்று இமயமுதற் குமரியிடைப்பட்ட நாடுகளில் உள்ள வைதிக மதத்தவர் யாவரும் வந்து போகின்றனரே! அப்படிப்பட்ட ஓர் அன்னை ஊட்டும் உருவத்தைக் காணலாம்' என்று ஜனத் திரளில் கலந்தாள். இவளுடைய விசித்ரமான உடை முறையும், ஐரோப்பிய முறையில் இட்ட கொண்டையும், கொண்டையில் இணைக்கப்பெற்ற வெள்ளி ஊசிகளும், தலையின்மீது தூசி படியாமல் இருக்குமாறு இடப்பெற்றிருந்த கறுப்பு வலை மூடியும் கண்ட பெண்கள், தாங்களே சிறிது வழிவிட்டு, நல்ல கூட்டத்திலும் அவளுக்கு இடங் கொடுத்தனர். உட்புகுந்து அருகிற் சென்ருள்.

இரண்டு தெய்வத் திருமேனிகளைத் தன் முன்பே கண்டாள் இந்துலேகா. அவர்களுள் ஒருவர், நீலமாமுகில் போன்ற இனிய திருமேனியும், அழகிய த்ரிபங்கியின் ஒசிவுகொண்ட இடையும், காண்பவர் களிக்குந் திருக்கோலமாக நின்ற ஸ்ரீ ரங்கமன்னர். அவரது வலப்புறத்தே—அவர் பக்கலில்—ஓர் கொடி; பெண்கொடி; திருமஞ்சனத்திற்காகக் கழற்றப்பெற்ற ஸர்வாபரணங்களையுடையவர்; அணிந்த அழகிய பட்டாடை தரித்த மலர்க் கொண்டை; பொலிவு பெற்ற திருமேனி; இவற்றுடன் கூடிய ஸ்ரீ ஆண்டாள். அவள் இவ்விரு திருமேனிகளையும் கண்ணுற்ருள். கண்டவுடன் அவளது மனத்தில் கடலைக் கண்டதுபோல், மலையைக் கண்டதுபோல், நீல மா வானைக் கண்டதுபோல், அன்புடன் கலந்த ஓர் வியப்புணர்ச்சி ஏற்பட்டது. பகல்போல் ஜ்வலிக்கும் தீபங்களின் ப்ரகாசத்தில் ஸ்ரீ ஆண்டாளின் திருமுகத்தைக் கண்டாள். விசாலமான பொலிவுகொண்ட அத்திருமுக மண்டலம் பூர்ணசந்த்ரன் என்ற கவிகளின் வர்ணனையை ஞாபக மூட்டியது. அருளும் பேரறிவும் கொழித்துக் கூத்தாடும் கண்கள். கஸ்தூரி திலகம் இலங்கும் கண்ணுக்கினிய திருநுதல். கொவ்வைச் செவ்வாயில் மந்தமான ஒரு புன்சிரிப்பு. அடியவரின் அருந்துயரெல்லாம் அழிந்து படச்செய்யும் புன்சிரிப்பு. கூடாரை வெல்லும் புன்சிரிப்பு. அப்பெருமாட்டியின் நிகரற்ற வடிவழகை, வைத்த கண் வாங்காதே நோக்கினள் இந்துலேகா. திருமஞ்சனம் முடிந்தது. திரை விழுந்தது. இந்துலேகா பக்கத்தில் ஒரு வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்தாள்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ஸடகோப யதீந்த்ர மஹா தேசிகாய நம:

செய்திகள்

ஸ்ரீ திருக்குடந்தை அழகிய சிங்கரது வார்ஷிக திருநக்ஷத்ர மஹோத்ஸவம்.

[பெங்களூரில் நடந்த வைபவம்]

நிகழும் பார்த்திவ ஸ்ரீ தைமீ 3உ (16—1—46) புதன்கிழமை திருவாதிரை நக்ஷத்ரம் கூடிய சுப தினத்தில், ஸ்ரீமதஹோபில மடம் 38-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளி யிருந்த ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ஸ்ரீநிவாஸ சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுடைய வார்ஷிக திருநக்ஷத்ர மஹோத்ஸவம், பெங்களூரில் துளஸீ தோட்டத்தில் கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ ப்ரஸந்ந க்ருஷ்ணஸ்வாமி திருவடிவாரத்தில் தில்லஸ்தாநம் ஸ்ரீ சடகோபராமாநுஜ யதீந்த்ர மஹா தேசிகன் நியமநப்படி வெகு ஸம்ப்ரமமாக நடைபெற்றது. ஷை மஹோத்ஸவத்தை ஸேவிப்பதற்கென்று மைஸூர் அரண்மனை மஹா வித்வான்கள் ஸ்ரீ. உப. தேசிகாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ. உப. ஜோஸ்யம் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, மைஸூர் பாடசாலை வித்வான் ஸ்ரீ. உப. சிறுதாமூர் சேஷாத்ர்யாசார்ய ஸ்வாமி, வித்வான் தலைக்காடு ஸ்ரீ. உப. சக்ரவர்த்தி ரகுநாதாசார்ய ஸ்வாமி முதலிய பரிகணிதர்களான மஹான்கள் எழுந்தருளி யிருந்தனர். தவிர: சென்னை தஞ்சை, ஸ்ரீரங்கம் முதலிய ஸ்தலங்களினின்று ஸ்ரீ அழகிய சிங்கர் திருவடிகளாய் உள்ளவர்களும், ஸ்ரீ தில்லஸ்தாநம் ஸ்வாமி திருவடிகளாய் உள்ளவர்களுமான அநேக ஆஸ்திக மஹான்கள், தாம் ஸ்ரீ அழகிய சிங்கர் ப்ரஸாத லப்தர்களாகும் பொருட்டு ஸேவை ஸாதித்தனர். அவ்வடியார்கள் குழாங்கள் திறத்தில், "மெய்யடியார்கள்தம் ஈட்டங் கண்டிடக் கூடுமேலதுகாணும் கண்பய னாவதே" என்று பொன்புரையும்வேற் குலசேகரன் பணித்த பொன்மொழிகள் அந்வர்த்தமாயின வென்னலாம்.

ஸ்ரீ ஸ்வாமி நியமநப்படி மார்கழிமீ 28உ (11—1—46) வெள்ளிக்கிழமை யன்று மஹோத்ஸவம் உபக்ரமிக்கப்பட்டு, காலை மாலை இருவேளைகளிலும், வேதாத்யயநம், நாலாயிர திவ்ய ப்ரபந்தம், ஸ்ரீதேசிக ப்ரபந்தம், ஸ்ரீமத் பாஷ்யம், ஸ்ரீகீதாபாஷ்யம், பகவத் விஷயம் முதலியவை பாராயணம் பண்ணப்பட்டு வந்தன. 16—1—46 புதன் கிழமை திருநக்ஷத்ரம் ஸ்ரீ அழகியசிங்கர் ஸம்பாவனைகளுடன், சாத்துமறை, பகல் ஒரு மணிக்கு இனிது நடந்தேறியது. பின்னர் வந்திருந்த ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குத் ததீயாராதநம் விசேஷமாக நடைபெற்றது.

இந்த மஹோத்ஸவத்தில், சாத்துமறை தினத்தன்றும், அதற்கு முதல்நாளும், மாலை 5-மணிக்கு, சைதாப்பேட்டை டீச்சர்ஸ் காலெஜ் ரிடயர்ட் தமிழ் வித்வான் ஸ்ரீ. உப. ஸுதர்சநாசார்ய ஸ்வாமி, 'ஆழ்வார் வைபவம்' 'ஆசார்ய வைபவம்' என்னும் விஷயங்களைப் பற்றித் துளஸி தோட்டம் ஸ்ரீ க்ருஷ்ணன் ஸந்நிதியில் அரியதொரு சொற்பொழிவாற்றினார். அவை வித்வான்களால் போற்றத் தகுந்தனவாய் விளங்கின.

V. கோபாலஸ்வாமி ஐயங்கார், M.A.

[விச்வேச்வரபுரம், பெங்களூர் ஸிடி]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

யோ(அ)ந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரண ஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந்நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

"உத்பத்திஸ்திதிநாஶாநாம் ஸ்திதௌ ஜ்ஞா கர்தவ்ய" [பிறப்பிலும் இறப்பிலும் எப்படி நாம் கரைத லற்று இருக்கிறோமோ, அப்படியே பகவத் ஸங்கல்ப ஸித்தமான தேஹ யாத்ரையிலும் நாம் எவ்வித கரைதலு மற்று இருத்தல் வேண்டும்] என்று சாஸ்த்ரங்கள் விளக்குகின்றன. அப்படி இருக்கையிலும், அஜ்ஞாநத்தால், 'மஹத்தான கஷ்டங்கள் எதிர்ப்பட்டு வருகின்றனவே! எவ்விதத்தில் அவைகளைக் கடக்கப் போகிறோம்!' என்னும் சோகத்தால் பெரியோர்களும், கலங்குகிறார்கள். இப்பொழுது இந்த ஜகத்தில் தென்படும் உத்பாதங்களைப் பார்த்து நடுங்காத ஜநங்களில்லை யென்றே சொல்லலாம். உணவுப் பொருள்கள் அகப்படாமல் ஏழை ஜநங்கள் லக்ஷக்கணக்காக மடிவது எவனுடைய மநஸ்ஸைக் கலக்கமாட்டாது? புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் அணுகுண்டின் க்ரௌர்யத்தைச் செவியால் கேட்கும்பொழுதே மநஸ் நடுங்குகின்றது. இவை போதாவென்று நமது தேசத்திற்கு அஸாதாரணமாக ஜாதி த்வேஷ மென்று ஒரு பைசாசம் கிளம்பியிருக்கின்றது. பாகிஸ்தான் வராவிட்டால் இந்தியாவில் ரக்த ஆறு ஓடுமென்று உத்கோஷிக்கிறார்கள் துருஷ்கர்கள். பரசுராமன் க்ஷத்ரிய ஜாதியை இருபத்தோரு தலைமுறை வேரறுத்தது போல, ப்ராஹ்மணப் பூண்டைத் தொலைத்துவிட வேண்டுமென்று கர்ஜிக்கிறார்கள் அப்ராஹ்மணர்கள். இந்தக் கோலாஹலத்தின் நடுவில் ஸாது ஜநங்கள் தமது ஸாத்விக வ்ருத்தியை நடத்திக்கொண்டு எப்படி வர்த்திக்கப் போகிறார்களோ தெரியவில்லை. ஸ்ரீ சரண்யனே கதி. "யத்ராயம் ஸ்தம்பவநாஶஸ்யம் ப்ஸு ஸர்வத: ஸர்வதா திஷ்டதோ பவேத்" என்னும் ஸ்ரீ வ்யாஸருடைய வார்த்தையும் பொய்யாகி விடுமோ?

* * * *

ஸ்ரீ மாலோல வித்வத் ஸத்ஸ்

இந்த ஸம்வத்ஸரத்திய ‘மாலோல’ வித்வத் ஸதஸ் ஹைதராபாத்திலே நடைபெறுமென்று சென்ற ஸஞ்சிகையில் விண்ணப்பித்துக்கொண்டிருந்தோம். அம்மாதிரி அந்த ஸ்தலத்திலேயே அந்த ஸதஸ் நடந்ததென்று நாம் அறிகிறோம். நிகழும் தை மாஸம் 10உ புதன்கிழமை ஆரம்பித்து ஸதஸ் பத்து திநங்கள் நடைபெற்றதென்றும், அநேக ஸ்தலங்களிலிருந்து பல சிறந்த வித்வான்கள் அதற்கு வந்திருந்தார்களென்றும், வேதாந்த சாஸ்த்ரத்தில் வாக்யார்த்தம் ப்ரதி திநமும் நடைபெற்றதென்றும் வார்த்தை கிடைத்திருக்கின்றது. இந்த ஸதஸ் காரணமாக ஸ்ரீ மதுராந்தகம் ஸம்ஸ்க்ருத பாடசாலைக்குப் பதினைந்து திநங்கள் விராமம் கொடுத்து, அங்குள்ள ப்ரவசந கர்த்தாக்களெல்லாரையும் ஸதஸ்ஸுக்கு அனுப்பவேண்டுமென்று ஸ்ரீ அழகிய சிங்கரிடமிருந்து ஸ்ரீமுகம் கிடைத்ததை அநுஸரித்து அம்மாதிரி பாடசாலைக்கு விராமம் கொடுக்கப்பட்டது; ப்ரவசந கர்த்தாக்களும் அவ்விடத்திற்கு அனுப்பப்பட்டார்கள். ஸ்ரீமதி கத்தவால் மஹாராணியின் ஹார்த்தமான பக்தி பூர்வக ஸஹாயத்தாலும், ஹைதராபாத் ஸம்ஸ்த்தாநத்திலுள்ள ஆஸ்திக ப்ரபுக்களின் உத்ஸாஹத்துடன் கூடிய பேருதவியாலும், இந்த ஸதஸ் எவ்வித குறைவுமின்றிக்கே நடைபெற்றது. ஸதஸ் பூர்த்தியடைந்த திநத்தில் [தை 19உ] ஸ்ரீ அழகிய சிங்கருடைய திருநக்ஷத்ர மஹோத்ஸவம் இனிது நடந்தது. அங்கு அப்பொழுது எழுந்தருளியிருந்த ஸ்ரீ வைஷ்ணவாஸ்திகர்களெல்லாரும் அதில் அந்வயித்து, அதை மிகவும் ப்ரஶஸ்தமாக நடப்பித்தார்கள். அன்று ஸாயம் ஸதஸ்ஸில் வித்வாந்களெல்லாருக்கும் ஸ்ரீ அழகிய சிங்கர் யாவத் த்ருப்தி ஸம்பாவனைகளைச் செய்து, எல்லாரையும் மந்த்ராக்ஷ ப்ரதான பூர்வகமாக அநுக்ரஹித்து அனுப்பினர். இரண்டு உத்ஸவங்களும் முடிவுபெற்றன. இம்மாதிரியான ஸதஸ்ஸுக்கள் பலவிடங்களில் ப்ரதி ஸம்வத்ஸரமும் நடைபெற்றால் சாஸ்த்ர ஜ்ஞாநம் ஓங்கி வளர்வதுடன், வித்வான்களிடம் இக்காலத்தில் தென்படும் வ்ருத்தி கார்ச்யமும் ஒருவாறு நிவர்த்தியடையும். நமது ஸமூஹத்தின் க்ஷேமத்தைத் தேட முயலும் ப்ரபுக்கள் இந்த விஷயத்தில் தமது புத்தியைச் செலுத்தி த்ருப்திகரமான ஒரு வ்யவஸ்தையைச் செய்ய ப்ரயத்நப்படவேண்டுமென்று நாம் ப்ரார்த்திக்கிறோம்.

*   *   *   *

திருப்பாவை

ஒவ்வொரு வர்ஷத்திலும் மார்கழி மாஸத்தில் பலவிடங்களில் தநுர்மாஸ பகவதாராதந ஸம்பத்தமாகத் திருப்பாவை என்னும் திவ்ய ஸூக்தி, பாகவத ப்ரவரர்களால் பலவிதமாக அநுஸந்தாநம் செய்யப்பட்டு வருகின்றது என்பது எல்லாருக்கும் விதிதமான விஷயம். ஆராதந காலத்தில் பாசுரங்களின் அநுஸந்தாநம் செய்யப்படுவதுடன், ஒவ்வொரு

திநத்திலும் ஒவ்வொரு பாசுரம் வீதம் அந்தப் பாசுரங்களின் அர்த்தமும் அநுஸந்திக்கப் பட்டு வருவது முண்டு. சென்னைமா நகரத்தில் இந்தக் கைங்கர்யம் ஒவ்வொரு வர்ஷத்திலும் ப்ரபலமாக நடந்து வருவதை அந்த ஸ்தல வாஸிகள் அறிவார்கள். இவ்வர்ஷத்தில் முன் வர்ஷங்களிற் காட்டிலும் பல மடங்கு அதிகமான சோபையுடன் இவ்விடத்தில் அது கொண்டாடப்பட்டது. மாம்பலத்தில் பாகவதர் ஸ்ரீ உப. ஸ்ரீரங்கம் சடகோபாசார்ய ஸ்வாமியாலும், மயிலாப்பூரில் காரப்பங்காடு வித்வான் ஸ்ரீ. உப. வேங்கடாசார்ய ஸ்வாமியாலும், திருவல்லிக்கேணி எழும்பூர் பட்டணம் முதலிய விடங்களில் ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ. உப. அண்ணங்கராசார்ய ஸ்வாமி முதலிய சிறந்த வித்வான்களாலும் சிறந்த உபந்யாஸங்கள் செய்யப்பட்டு வந்தன. சென்னை முழுவதும் திருப்பாவைக் கோஷத்தால் நிறைந்திருந்ததென்றே சொல்லலாம். நிற்க, இந்த வர்ஷத்தில் இது ஸம்பந்தமாக மற்றுமொரு ப்ரசாரம் செய்யப்பட்டு வருவதை நாம் இவ்விடத்தில் ப்ரஸ்தாவிப்பது ப்ராப்தம். மாம்பலத்தில் பகவத் விஷய காலக்ஷேப ஸபையென்று வைதிக ஸங்கமொன்று இரண்டு வர்ஷகாலமாக நடைபெற்று வருகின்றது. இவ்வர்ஷம் உபந்யாஸங்களை ப்ரசாரம்செய்வதுடன் திருப்பாவைப்பாசுரங்களை இசையோடு கானம் செய்யும் பாலிகைகளுக்குச் சிறந்த பரிசு கொடுப்பதற்கும் ஷை ஸபையார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். சற்றேறக்குறைய ஐந்நூறு பாலிகைகள் அம்மாதிரி பாடுவதற்கு முன் வந்திருக்கின்றனர். இவர்களுக்குச் சற்றேறக்குறைய ரூ. 500 போல் பரிசாகக் கொடுக்கப்படும். அநேக பாகவதர்கள் இந்தச் செலவுக்கு அபேக்ஷிதமான த்ரவ்ய ஸஹாயம் செய்திருக்கிறார்கள். அஹோபிலமடம் ஸ்ரீ அழகிய சிங்கர், ஸ்ரீவானமாமலை ஜீயர், ஸ்ரீ திருக்குறுங்குடி ஜீயர் ஸ்வாமிகள், இவர்களெல்லாரும் ஒவ்வொருவரும் ரூ 150—அநுக்ரஹித்து அனுப்பினார்கள். திருப்பாவை உபந்யாஸத்தில், உபந்யாஸத்துக்குப் பூர்வம் சிறிய பாலிகைகள் திருப்பாவைப் பாசுரங்களைக் கானம் செய்ய அதைக் கேட்டு எல்லாரும் மிகவும் ஆநந்தப்பட்டனர். அந்தப் பாலிகைகளுக்குப் பாசுரங்களின் உட்கருத்தும் அதன் ரஸமும் தெரியாமல் இருக்கலாம். இருந்தபோதிலும், கேவலம் அக்ஷர ராசி க்ரஹணமும் ஸ்ரீ சரண்யனுக்கு முகோல்லாஸகரமென்பது நமது ஸித்தாந்தமானதால், அந்தப் பாலிகைகளை சரண்யன் அநுக்ரஹிப்பனென்றே நாம் நம்புகிறோம்.

18928

294	ஸ்ரீ I. ஸ்ரீநிவாஸாசாரியர், சைதாப்பேட்டை	...	1	0
361	,, K. ஸ்ரீநிவாஸராகவ ஐயங்கார், உடையார்	...	2	0
374	,, V. ரங்கஸாமி, ஈரோட்	...	5	0
388	,, வேதாந்தாசாரியர், கல்கத்தா	...	3	0
414	,, K. D. ராஜகோபால ஐயங்கார், விழுப்புரம்	...	3	0
426	,, S. கணேஷ், பம்பாய்	...	2	0
443	,, P. N. சேஷய்யங்கார், ஸ்ரீரங்கம்	...	2	0
451	,, K. R. ஸ்ரீநிவாஸையங்கார், திருச்சி	...	2	0
454	,, நரஸிம்ஹாசாரியர், மதராஸ்	...	3	0
464	,, A. வெங்கடாசார்யர், கர்க்கி	...	3	0
475	,, சே. ஸ்ரீநிவாஸராகவாசார்யர், தூசி	...	2	0
483	,, V. ராமஸ்வாமி ஐயங்கார், புகளூர்	...	3	0
533	,, K. ஸ்ரீநிவாஸன், கல்கத்தா	...	3	0
539	,, S. ஸம்பத்நாராயணன், மதராஸ்	...	2	0
560	,, R. S. ஐயங்கார், கல்கத்தா	...	3	0
561	,, K. ஜகந்நாத அய்யங்கார், கல்கத்தா	...	3	0
562	,, A. நரஸிம்ஹாசார்யர், கல்கத்தா	...	3	0
585	,, K. S. சேஷையங்கார், காட்டாம்பட்டி	...	5	0
622	,, K. ஸ்ரீநிவாஸ கோபாலன்	...	3	0
644	ஸ்ரீமதி. உ. ச. ராஜம்மாள், அவளூர்	...	1	0
648	,, வேதவல்லி அம்மாள், குடவாசல்	...	3	0
656	ஸ்ரீ K. ஆராவமுதன், கல்கத்தா	...	3	0
657	,, S. N. ரங்கஸ்வாமி ஐயங்கார், கல்கத்தா	...	3	0
658	,, M. R. சாரி; கல்கத்தா	...	3	0
659	,, A. ரங்காசாரியர், கல்கத்தா	...	3	0
660	,, V. ராஜகோபால், கல்கத்தா	...	3	0
661	,, I. சேஷையங்கார், கல்கத்தா	...	3	0
676	,, K. S. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், ஸ்டுட்வர்ட்பேட்டை		2	0
690	,, அலமேலு-ஜகந்நாதன், சைதாப்பேட்டை	...	3	0
691	,, S. க்ருஷ்ணையங்கார், கல்கத்தா	...	3	0
692	,, T. S. குப்புஸாமி ,,		3	0
693	,, N. ஸ்ரீநிவாஸன் ,,	...	3	0
694	,, S. V. ராகவன் ,,	...	3	0
695	,, N. நாராயணையங்கார் ,,	...	3	0
698	,, ராவ்ஸாஹிப் V. G. துரைசாமி ஐயங்கார், ஸ்ரீரங்கம்		3	0
699	,, P. T. ஸ்ரீநிவாஸாசரியர், மயிலாப்பூர்	...	3	0
700	,, K. V, க்ருஷ்ணமாசாரி, திருவல்லிக்கேணி	...	3	0
701	,, K. க்ருஷ்ணஸாமி ஐயங்கார், மயிலாப்பூர்	...	3	0
702	,, K. S. ராகவாசார்யர், மதுரை	...	2	0
705	,, V. லக்ஷ்மீநரஸிம்ஹாசார்யர், பெங்களூர்	...	3	0
706	,, S. ஸ்ரீநிவாஸன், கல்கத்தா	...	3	0

Regd. No. M. 4437.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அஹோபில மடத்தில் அச்சிடப் பெற்ற
கீழ்க் கண்ட புஸ்தகங்கள் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' ஆபீஸில்

விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

		சந்தாதாரர்களுக்கு ரூ. அ. பை.	மற்றவர்கட்கு ரூ. அ. பை.
1.	ஸ்ரீ அதிகரண ஸாராவளி (தேவநாகர லிபி) [சிந்தாமணி, கல்பதரு வ்யாக்யாநத்துடன் காலிகோ பயிண்ட் செய்தது]	6—8—0	7—8—0
2.	உக்தி நிஷ்டாபரணம் ந்யாஸ நிஷ்டா மீமாம்ஸா ச (க்ரந்த லிபி)	0-12—0	1—0—0
3.	உக்திநிஷ்டாபரணோத்யோதம் (,,)	0—8—0	0-12—0
4.	வீக்ஷாரண்ய க்ஷேத்ர மஹாத்ம்யம் மணிப்ரவாள வ்யாக்யாநம் (க்ரந்த லிபி)	... 1—0—0	1—8—0
5.	ந்யாஸ நிர்ணயம் (க்ரந்த லிபி)	... 0—8—0	0-12—0
6.	ஸ்ரீ வீரராகவஸ்வாமி ஸுப்ரபாதம் (க்ரந்த லிபி)	0—3—0	0—4—0
7.	ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ஸங்க்ரஹம் (க்ரந்த லிபி)	2—0—0	3—0—0
8.	ஈஶாவாஸ்ய, கேந, கடோபநிஷத் (நாகர லிபி, தமிழ் மொழிபெயர்ப்புடன், 160 பக்கம்)	1—0—0	1—8—0

(தபால் செலவு வேறு)

வேண்டுபவர்கள் :—

"மானேஜர், **ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,**
கெ. 5, ராமஸ்வாமி தெரு, தியாகராய நகர், சென்னை."
என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

Printed by T. A. P. Srinivasavaradachariar,
at Sri Sudarsana Press, 14, Sannidhi Street, Little Conjeeveram.
Edited & Published by S. Vasudevachariar, 5, Ramaswami St., Tyagarayanagar, Madras.